## ஆண்டுதோறும் 5 லட்சம் பேர் பலி

# புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்க ₹4,697 கோடி ஒதுக்கீடு

### மத்திய அதிகாரி தகவல்

சென்னை, செப்.7: இந்தியாவில் ஆண்டுதோறும் புற்றுநோய்க்கு 5 லட்சம் பேர் இறக்கின்றனர். அடுத்த 3 ஆண்டுகளுக்கு நாடு முழுவதும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கவும், மருத்துவ உபகரணங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தவும் ₹4,697 கோடி மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் துணை ஆணையர் தாமோதர் பச்சானி தெரிவித்துள்ளார்.

இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் சார்பில் கிண்டியில் நேற்று புற்றுநோய் தொடர்பான 2 நாள் மாநாடு தொடங்கியது. இதில், இங்கிலாந்து துணை தூதர் மைக் நிதாவ்ரியானகிஸ் வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் துணை ஆணையர் டாக்டர் தாமோதர் பச்சானி பேசியதாவது:

உலகளவில் புற்றுநோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 2008ல் இருந்து ஆண்டுதோறும் 1 கோடியே 27 லட்சம் பேர் புற்று நோயால் பாதிக்கப்படுகின்றனர். சுமார் 76 லட்சம் பேர் இறக்கின்றனர். இதில் பாதி பேர் வளரும் நாட்டை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஆண்டுதோறும் 11 லட்சம் பேர் புதிய நோயாளிகள் உருவாவதுடன், ஆண்டுதோறும் 5 லட்சம் பேர் இறக்கின்றனர்.

புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு மற்றும் மருத்துவ வசதிகளை வழங்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்த 3 ஆண்டுகளுக்கு நாடு முழுவதும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கவும், கட்டுமானங்களை வலுப்படுத்தவும், விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தவும் ₹4,697 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. நாடு முழுவதும் 20 பெரிய மருத்துவமனைகள், 50 சிறிய மருத்துவமனைகளை தேர்வு செய்து சிகிச்சை அளிக்கப்படும்.

ஏற்கனவே, 2 இடங்களில் தேசிய அளவிலான புற்றுநோய் சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், டெல்லி மற்றும் சென்னையில் தேசிய அளவிலான புற்றுநோய் சிகிச்சை மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் டெல்லியில் மட்டும் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் லண்டன் கிங்ஸ் கல்லூரி பேராசிரியர் ஆர்னி புருஷோத்தமன், லண்டன் பல்கலைக்கழக கல்லூரி பேராசிரியர் லார்டு காக்கர், டாடா மெமோரியல் மைய இயக்குநர் டாக்டர் ராஜேந்திர பட்வே, மியாட் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குநர் மற்றும் இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் நிறுவனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், டாக்டர் ராம்பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.




புற்றுநோய் தொடர்பான 2 நாள் மாநாடு கிண்டியில் நேற்று தொடங்கியது. இதில் இங்கிலாந்து துணை தூதர் மைக் நிதாவ்ரியானகிஸ், லண்டன் கிங்ஸ் கல்லூரி பேராசிரியர் ஆர்னி புருஷோத்தமன், லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் லார்டு காக்கர், மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் துணை ஆணையர் டாக்டர் தாமோதர் பச்சானி, டாடா மெமோரியல் மைய இயக்குநர் டாக்டர் ராஜேந்திர பட்வே, மியாட் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.